மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு இடங்களில் குறைகள் உள்ளது; மூன்று துறைகளையும் சேர்த்து ஒருங்கிணைத்து கூட்டம் அமைத்து சரி செய்யப்படுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையின்பேரில் அந்த மூன்று துறைகளையும் இணைத்து தமிழ்நாட்டு மக்களுடைய எந்தக் குறைகளாக இருந்தாலும், நிவர்த்தி செய்யப்படுகின்ற பணிகளை அம்மா அவர்களது அரசு மேலான கவனத்துடன் செய்யும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 352, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை, தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 353, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

353—

ஆவின்

***12543—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் ஆவின் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை நகரத்தில் ஆவின் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ய புதுக்கோட்டை நகராட்சி 7 இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அந்த இடங்களில் ஆவின் பாலகங்கள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்பதற்கு

2003 ஏப்ரல் 28]

இணங்க, கோரிக்கை வைத்த உடனே நிறைவேற்றுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு எங்களுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடங்கப்படுகின்ற அந்த விற்பனை நிலையங்களிலே, வேலை இல்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களையும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்களையும் முகவர்களாக நியமித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரில் பால் உப பொருட்கள் விற்பனை செய்ய தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள ஏழு இடங்களில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மற்றும் தனியார்களை முகவர்களாக நியமனம் செய்து விற்பனையை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரிலே மட்டும் அல்லாமல், புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற எல்லா தாலுகா தலைமை நகரங்களிலேயும் இந்த விற்பனை நிலையங்கள் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அலுவலகம் மட்டுமல்லாமல் அரசு சம்பந்தப்பட்ட பல்வேறு இடங்களில், மருத்துவமனைகள், பஸ் நிலையங்கள், இரயில்வே நிலையங்கள் போன்ற இடங்களில், பொதுப் பணித் துறை மற்றும் நகராட்சி, மாநகராட்சி இடங்களில், அனுமதி

பெற்று அனைத்து இடங்களிலும் இதுபோன்ற பாலகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *354*, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

354—

கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***19944—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. எனவே சங்கத்திற்குக் கட்டடம் கட்டும் வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி காசாம்பு பூமாலை: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் ஒன்றியத்தில், கீழ்ப்பட்டு கிராமத்திலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் இந்த நிதியாண்டிலாவது கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பதியவில்லை. அதனால் அங்கே கட்டடம் கட்டுவதற்கு உண்டான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.